செய்தி வெளியீடு எண்: 176 நாள் : 29.03.2016

**வீடு தேடிவரும் வண்ண வாக்காளர் அடையாள அட்டை– இணையதளம் மூலம் 30.03.2016 முதல் செயல்படுத்த ஸ்டேட்பாங்க் ஆஃப் இந்தியாவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்.**

தமிழ்நாட்டில் சட்டமன்றத்தேர்தல் நடைபெறுவதையொட்டி, தேர்தலில் பல புதுமையான தொழில்நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன. தொலைந்துப்போன வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைக்கு பதிலாக புதிய மாற்று வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையைப் பெறவும், அண்மையில் எடுக்கப்பட்ட வண்ணபுகைப்படத்தினை வாக்காளர் அட்டையில் புதுப்பித்துக்கொள்ளவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தற்போது வாக்காளர் அடையாள அட்டையினை வீட்டிலேயே பெற்றுக்கொள்ளும் புதிய வசதி அறிமுகப்படுத்தப்படுகிறது. இதன்படி வண்ண வாக்காளர் அடையாள அட்டையை விரும்பும் வாக்காளர், எந்த மையத்திற்கும் செல்லாமல் இருந்த இடத்திலிருந்தே கணினி மூலமாகவோ அல்லது கைப்பேசி மூலமாகவோ தேர்தல் ஆணையத்தின் வலைதளத்திலேயே(www.elections.tn.gov.in) சென்று ஆன்லைன் மூலம் 001 என்ற படிவத்தினை பூர்த்திசெய்து உரிய தொகையை ஆன்லைனில் செலுத்தினால் வாக்காளர் அடையாள அட்டை வழங்கப்படும். வாக்காளர் அடையாள அட்டைக்கு மட்டும் ரூபாய் 25/- பணம் செலுத்தினால் தேர்தல் ஆணையம் தெரிவிக்கும் வசதியாக்க மையத்தில்(Facilitation Centre) பெற்றுக்கொள்ளலாம்.

தங்கள் இருப்பிடத்திற்கே அடையாள அட்டை வேண்டுமென விரும்புபவர்கள் கூடுதலாக தபால் செலவு ரூபாய் 40/- மற்றும் இதர செலவாக ரூபாய் 2/- சேர்த்து தேர்தல் ஆணைய வலைதளத்தில் செலுத்த வேண்டும். இதற்காக தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி அவர்களால் இன்று (29.03.2016) ஸ்டேட்பாங்க் ஆஃப் இந்தியாவுடன்(State Bank of India) ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டுள்ளது. இந்த திட்டம் நாளை முதல் (30.03.2016) செயல்படுத்தப்படும்.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி திரு. ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., அவர்களும், ஸ்டேட்பாங்க் சார்பில் தமிழ்நாடு மற்றும் கேரளா மாநிலங்களுக்கான தலைமை பொதுமேலாளர் திரு. B. ரமேஷ்பாபு அவர்களும் கையெழுத்திட்டுள்ளனர்.

இந்நிகழ்ச்சியின்போது தமிழ்நாடு கூடுதல் தலைமை தேர்தல் அதிகாரி திரு.R.கிர்லோஷ்குமார், இ.ஆ.ப., இணை தலைமை தேர்தல் அதிகாரி(தொழில்நுட்பம்)

திரு.அஜய் யாதவ், இ.ஆ.ப., ஸ்டேட்பாங்க் ஆஃப் இந்தியா பொதுமேலாளர் திரு.D.இந்துசேகர், துணை பொதுமேலாளர் A.புவனேஸ்வரி, Onward e-services முதுநிலை துணைதலைவர் திரு. V.சங்கர் தலைமை அலுவலர் திரு. P.திருமலை ஆகியோர் உடனிருந்தனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**